**செ.வெ. எண்: 402** **நாள்: 12-07-2012**

# செய்தி வெளியீடு

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாக விளங்குவது கிராமங்கள். கிராமங்கள்தான் நம்நாட்டின் உயிர்நாடி என்பதன் அடிப்படையில் கிராம மக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்திடும் வகையில் இரண்டாம் பசுமை புரட்சியை உருவாக்குவதற்கும், வெண்மை புரட்சி ஏற்படுத்தப்படுவதற்கும் தேவையான திட்டங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் செயல்படுத்தி வருகிறார்கள்.

கிராமப்புற பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் கால்நடைகள் நன்கு பராமரிக்கப்பட வேண்டும் என்பதை கருத்தில் கொண்டு, சென்ற ஆண்டு கால்நடை மருத்துவமனை மற்றும் கால்நடை மருந்தகங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார்கள். அதன் அடிப்படையில், கால்நடைத் துறையின் கீழ் உள்ள 67 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 361 கால்நடை மருந்தகங்களுக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கு 22 கோடி ரூபாயும், அறைகலன்கள் வாங்குவதற்காக 3 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்றன. இதன் மூலம் கிராமங்களில் கால்நடை வளர்ப்போர் மிகுந்த பயன் அடைந்தனர்.

அதேபோன்று இந்த ஆண்டு, அதாவது 2012-13-ல் கால்நடை மருத்துவ நிலையங்களின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் பொருட்டு, 49 கால்நடை மருத்துவமனைகள் மற்றும் பெரு மருத்துவமனைகள் 353 கால்நடை மருந்தகங்கள் மற்றும் 4 அலுவலகக் கட்டடங்களின் பராமரிப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகளுக்காக 22 கோடி ரூபாயும், அறைகலன்கள் வாங்குவதற்காக 3 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசின் இந்த நிதி ஒதுக்கீட்டின் மூலம், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் மருந்தகங்கள் புதுப்பொலிவு பெறும். மேலும், கால்நடைகளுக்கு நல்ல தரமான மருத்துவ வசதி கிடைத்திடவும் இது வழி வகுக்கும்..

******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9

நாள் : 12.7.2012